# புதுவாழ்வுப் பூங்கா



ஆண்டுச் சஞ்சிகை - 2007

# புதுவாழ்வுப் பூங்கா

(மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பயிற்சி நிலையம்)

# ஆண்டுச்சஞ்சிகை ~ 2007

*"குழந்தைகளாகப் பிறந்தோம்*
*குழந்தைகளாகவே வாழ்கின்றோம்"*

**புதுவாழ்வுப் பூங்கா**

தவசிகுளம்
(சேவாலங்கா பண்ணைக்கு அருகில்)
வவுனியா
தொ.பே : 024-4900484

**நடைமுறைப்படுத்தும் நிறுவனம்**

**வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்**

(வவுனியா மாவட்டம்)
இல: 181 நாவலர் வீதி,
பண்டாரிகுளம்,
வவுனியா.
தொ.பே : 024-2221394,024-5670088,
பெக்ஸ் : 024-2221394
ஈமெயில் : orhanngo@bellmail.lk
இணையதளம் : www.orhanlk.org

## மலரின் உள்ளே.....

1. பாடசாலைகீதம்
2. ஓகன் நிறுவன தலைவர் அவர்களிடமிருந்து செய்தி
3. The Message from the President of ORHAN Sri Lanka (U.K)
4. மனவளர்ச்சிக் குறைபாடு
5. அதிபரின் ஆண்டறிக்கை 2007
6. நன்றிகள்

# பாடசாலைகீதம்

வாழ்க எங்கள் புதுவாழ்வுப் பூங்கா
வாழிய என்றும் ஞாலத்திலே
சூழ்க அதன் ஒளி சூரியனாய் எங்கும்
சூழ்ந்திட பெரும் ஞானத்திலே

ஓகன் வவுனியா ஓங்கு திறனுடன்
ஓகன் சிறிலங்கா யூகேயுடனே
தாகமுடன் எங்கள் தேவை அறிந்திங்கு
தாபித்த இதுபள்ளி வளமுடனே
(வாழ்க)

நாளாந்த வாழ்வியல் திறனுறு பயிற்சிகள்
நாம் இங்கு விருப்புடன் கற்றிடவே
சீர்போந்த எண்ணுடன் எழுத்தையும் கற்று
சிறப்புற சமவாய்ப்பு பெற்றிடவே.
(வாழ்க)

# ஓகன் வவுனியா நிறுவன தலைவர் அவர்களிடமிருந்து செய்தி

2007ம் வருடம் "புதுவாழ்வுப் பூங்கா" வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு வருடமாக சுட்டுதல் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல ஏனெனில் இவ்வருடமே இந்நிலையத்துக்கென சேவாலங்கா பவுன்டேசன் நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டு வவுனியா பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட சொந்தக் காணி பெற்றுக்கொள்ளப்பட்டது. சிறார்களின் போக்குவரத்து பிரச்சினையை தீர்க்கும் முகமாக சொலிடார் நிறுவனம் பேரூந்து வண்டி ஒன்றை வழங்கியதும் இவ்வருடத்திலேயே.

அதே நிறுவனம் எமது காணித்துண்டில் நிரந்தர பயிற்சி நிலைய கட்டிடத்தை அமைப்பதற்கு நிதி அனுசரணை வழங்கியதும் இவ்வாண்டிலேயே. இவற்றோடு கூட பல கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், பயிற்சி நிலையத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் பல அன்பர்களால் அன்பளிப்புச் சொய்யப்பட்டதும் இவ்வாண்டிலேயே. ஓகான் சிறிலங்கா U.K நிறுவனத்துடன் SCOT, MIOT ஆகிய அமைப்புகள் இங்கிலாந்திலிருந்து வழமைபோலும் டயகோனி பேடன் என்ற அமைப்பு ஜேர்மனியில் இருந்து புதிதாகவும் நிதி வழங்களில் இணைந்து கொண்டமையும் இவ்வாண்டிலேயே.

இத்தகைய மனநிறைவு அம்சங்களுடன் 4வருடங்களை பூர்த்தி செய்து ஐந்தாவது ஆண்டில் காலடி வைக்கும் இத்தருணத்தில் அதன் ஆண்டு மலருக்கு இச் செய்தியை வழங்குவது அகமகிழ்வை தருகின்றது.

சிந்திப்பதில் இடர்பாடு கொண்ட இச்சிறார்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது உண்மையிலேயே சவால்கள் நிறைந்த பணி என்பது எவருக்கும் எளிதில் புரியும். எனினும் அர்ப்பணிப்பு மிக்க வள ஆசிரியர்களினதும் ஏனைய ஊழியர்கனளினதும் ஓகான் நிறுவன நிறைவேற்று குழுவினரதும் தன்னலமற்ற சேவையினால் இச் சவால்களுக்கு முகம் கொடுத்து புனர் வாழ்வு செயல்முறையை சிறப்பாக நிறைவேற்றி உள்ளோம் என்றே நான் கருதுகின்றேன்.

இத்தகைய அரும் பணியில் கரம் கோர்த்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எனது நன்றிகள் சமர்ப்பணம்.

இப்பணியில் நாம் பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் மிக அதிகம் ஆசிரியர்களினதும், ஊழியர்களினதும், நிறைவேற்று குழுவினரதும், பெற்றோர்களினதும் ஏனைய நலன் விரும்பிகளினதும் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் இருந்தால் ஒழிய இப்பயணம் இலகுவாதல் முடியாது.

அவ் ஒத்துழைப்பு 2008ம் புத்தாண்டில் பூரணமாக கிட்டும் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

இச்சிறார்களுக்கும் அவர்களுக்கு புனர்வாழ்வூட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் 2008ம் ஆண்டு மேலும் ஒளிமயமானதாக அமைய வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திரு. வெ. சுப்பிரமணியம்**
கௌரவ - தலைவர்,
ஓகான் - வவுனியா

# THE MESSAGE FROM THE PRESIDENT OF ORHAN – SRI LANKA (U.K)

In keeping with the tradition of Puthuvazhvu Poonga on the eve of its fourth anniversary, on behalf of ORHAN SRI LANKA (U.K), I would like to congratulate ORHAN (Vavuniya) Sri Lanka, the President, Executive Committee, and the staff of Puthuvazhvu Poonga" for their dedicated service.

Maintaining an education centre of this kind is not easy but ORHAN is keeping up in its courage, marching forward successfully bearing the hardships and pains developing its future structure, buildings and welfare.

At the end of the 2007, we were very happy together with Mr.V.Subramaniam, running a fund raising to support its needs financially. In 2008, we are planning to explore the ways to fulfill the ever increasing needs of the children and the school. We appreciate your efforts in helping these challenged children and their parents, are hoping for the better world for tomorrow's Sri Lanka.

I hope that the communities living in London, along with the members of ORHAN SRI LANKA (U.K) and all their families, friends, well wishers, the trustee boards of the temples and Old Boys Associations are mindful of your humanitarian tasks and will be pleased to respond to your projects and programs.

I wish you all cordially working for its success.

**Kandiah Vipulananthan**
The President
ORHAN – SRI LANKA (U.K)

# மனவளர்ச்சிக்குறைபாடு

ஒரு குழந்தையின் வளர்ச்சிக் காலம் என்பது அதன் கரு உருவானது முதல் குழந்தைக்குப் 18வது பிறந்தநாள் வரையாகும். இந்த காலகட்டத்தில் பல்வேறு காரணிகளினால் ஒரு குழந்தையின் அறிவுத்திறன் அதன் வயதொத்த பிற குழந்தைகளின் அறிவுத் திறனைவிட குறைவாக இருக்கலாம். மன வளர்ச்சிக்குறைவு என்பது உடல் ரீதியான மற்றும் மன ரீதியான வளர்ச்சியில் ஏற்படும் தாமதமான ஒரு நிலை உ+ம் : மனவளர்ச்சி குறைந்த குழந்தைகள் மற்றக்குழந்தைகளோடு ஒப்பிடும் போது நடப்பதிலும் பேசுவதிலும் மற்றும் சாப்பிடுவதிலும் தாமதமான வளர்ச்சியுடன் காணப்படுவார்கள். உ+ம் : 5 வயதுக் குழந்தையின் நடவடிக்கைகள் 3வயது குழந்தையைப் போலவோ அல்லது ஒருவயது குழந்தையைப் போலவோ இருக்கும் அறிவுத்திறன் குறைவாக இருப்பதினாலும் வேறு குறைபாடுகளின் காரணமாகவும் சமுதாயத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு பழகுவதிலும் செயல்படுவதிலும் திறமை குறைவாக இருக்கும்.

## வரையறை

மனவளர்ச்சிக் குறைபாடு பற்றிப் பல்வேறு வரையறைகள் இருப்பினும் மனவளர்ச்சிக் குறைபாட்டுக்கான அமெரிக்கச் சங்கம் (American Assoiciation on Mental Deficiency) நிர்ணயித்துள்ள வரையறையே தற்போது உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது அதன்படி "குறிப்பிடத்தக்கவாறு சராசரிக்கும் கீழான பொது நுண்ணறிவு இயக்கம், அதன் காரணமாகவோ அல்லது அதனோடு இணைந்தோ பொருத்தமான நடத்தையில் ஏற்படும் ஒருங்கிணைந்த ஆற்றல் குறைவு ஆகியவை வளர்ச்சிக் காலத்தில் வெளிப்படுதலே மனவளர்ச்சிக் குறை எனப்படும்.

## வரையறையின் உட்கூறுகள்

உளவியல் சோதனைகளின் (Psychological tests) மூலம் நுண்ணறிவை அளந்து ஈவைப் (Intelligence Quotient) கணக்கிடுகிறார்கள். நுண்ணறிவு எல்லோருக்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை

மன வயதை தரமான உளவியல் சோதனைகள் மூலம் பெறலாம். காலவயது என்பது ஒருவரின் சாதாரண வயதைக் குறிக்கும் மனவயதைக் (Mentel Age) காலவயதால் (Chronologial Age வகுத்து 100ஆல் பெருக்க நுண்ணறிவு ஈவு கிடைக்கும்.

அதாவது $$\frac{\text{மனவயது}}{\text{காலவயது}} \times 100 = \text{நுண்ணறிவு}$$

உ+ம் : ஒரு குழந்தையின் மனவயது 4.5 எனவும், கால வயது 10எனவும் இருக்குமானால், அக்குழந்தையின் நுண்ணறிவு 45ஆகும்

$$\frac{4.5}{10} \times 100 = 45$$

90முதல் 110வரை நுண்ணறிவு இயக்கம் சாதாரணமாகக் காணப்படும் சராசரிக்கும் கீழான (Subaverage) என்ற சொற்றொடர் நுண்ணறிவு ஈவு 90ற்கும் குறைவாக உள்ளதைக் குறிக்கும். குறிப்பிடத்தக்கவாறு (Significantly) என்ற சொற்றொடர் நுண்ணறிவு ஈவு 70க்கும் கீழான நிலையில் இருப்பதை குறிக்கும். எனவே நுண்ணறிவு ஈவு 70ற்குக் குறைவாக உள்ளவர்களை மனவளர்ச்சி குன்றியவர்கள் எனக் கொள்ளலாம்.

காலவயதிற்கேற்ப ஒரு குழந்தையிடம் காணப்படும் நடத்தையே பொருத்தமான நடத்தை (Adaptive Behaviour) எனப்படும். அதாவது ஒருமனதின் ஒவ்வொரு பருவத்திலும் அடைய வேண்டிய

திறன்களை அடைந்து அதற்கேற்ப அவனது நடத்தைகளும் இருக்குமேயானால் அதையே பொருத்தமான நடத்தை எனக் கூறலாம். மனவளர்ச்சிக்குறை என்பது மேற்குறிப்பிட்ட பொருத்தமான நடத்தைகளில் ஏற்படும் செயற்பாட்டுக் குறைவைக் குறிக்கிறது. அதாவது ஒரு 8வயதுக் குழந்தையிடம், 3வயதுக் குழந்தைக் கேற்ற பொருத்தமான நடத்தைகள் மட்டுமே காணப்படின் அக்குழந்தையை மனவளர்ச்சிக் குன்றிய குழந்தை எனத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு குழந்தையிடம் காணப்படும் நுண்ணறிவு இயக்கக் குறைவும், பொருத்தமான நடத்தைக் குறைவும் ஒருங்கிணைந்து வளரும் பருவத்தில் மனவளர்ச்சியை பாதித்து மனவளர்ச்சிக் குறைபாடு ஏற்படுகிறது.

## மனவளர்ச்சிக் குறைபாட்டின் வகைப்பாடுகள்

மனவளர்ச்சிக் குறைபாட்டைப் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் அவரவர் வசதிக்கேற்ப பலவிதமாக வகைப்படுத்தி உள்ளனர். வகைப்பாடுகளில் மிகவும் முக்கியமாக உள்ள உளவியல் வகைப்பாடு, கல்வியியல் வகைப்பாடு பற்றி மட்டும் இங்கே பார்ப்போம்.

### *உளவியல் வகைப்பாடு*

நுண்ணறிவு ஈவை அடிப்படையாகக் கொண்டு உளவியல் வகைப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வகைப்பாட்டின் படி மனவளர்ச்சிக்குறைபாடு 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| வகைப்பாடு | நுண்ணறிவு ஈவுபரவல் |
|---|---|
| i) குறைவான மனவளர்ச்சிக் குறைபாடு | 50 - 70 |
| ii) மிதமான மனவளர்ச்சிக் குறைபாடு | 35 - 49 |
| iii) அதிகமனவளர்ச்சிக் குறைபாடு | 20 - 34 |
| iv) தீவிர மனவளர்ச்சிக்குறைபாடு | 20க்குக்கீழ் |

1. குறைவான மனவளர்ச்சிக் குறைபாடு (Mild Mental Retardation)

ஈவு 70-50வரைக்கும் இருக்கும். இவர்களுக்கு எளிதான கல்வி முறைகளைப் பயிற்றுவிக்கலாம். இவர்களுக்குத் தானாக தீர்மானிக்க இயலாததால், எளிதான தொழிற்பயிற்சிகளைத் தெளிவாகக் கற்றுக்கொடுத்துப் பயிற்றுவிக்கலாம். இவர்கள் தங்களது சுயதேவைகளைப் பிறர் உதவியின்றி பூர்த்தி செய்து கொள்வார்கள். இந்தக் குழந்தைகளின் அறிவுத்திறன் எல்லாவித செயற்பாடுகளிலும் ஒன்று போல் இருப்பதில்லை.

2. மிதமான மனவளர்ச்சிக்குறைபாடு (Moderate Mental Retardation)

இவ்வகைக்குழந்தைகளின் செயற்பாடுகள் நயமற்று இருக்கும். ஆரம்ப காலத்திலேயே முறையான பயிற்சி அளிப்பதன் மூலம் இவர்களது சுயதேவைகளை ஓரளவிற்கு சுயமாக பூர்த்தி செய்வதற்கும், பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைப்பழக்கங்களையும் கற்றுக்கொள்வார்கள். அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான எளிதான சொற்களை வாசிக்கவும், எழுதவும் எளிதான கணக்குகள் போடவும் கற்றுக் கொடுக்கலாம்.

3. அதிக மனவளர்ச்சிக் குறைபாடு (Severe Mental Retardation)

இவ்வகைக் குழந்தைகளுக்கு அன்றாட வாழ்க்கைகுத் தேவையான சுயதேவைகளை ஓரளவிற்கு உதவியுடன் செய்வதற்கும் அடுத்தவர்களுடன் பழகும் முறையையும். கற்றுக் கொடுக்கலாம். இந்தக் குழந்தைகளுக்குப் பேசுவதிலும் அசைவதிலும் உணர்வதிலும் குறைபாடுகள் இருக்கும் இவர்களுக்கு நடத்தைக் குறைபாடுகள் அதிகம் இருக்கலாம்.

4. தீவிர மனவளர்ச்சிக் குறைபாடு (Profound Mental Retardation)

இவ்வகைக் குழந்தைகளுக்கு மத்திய நரம்பு மண்டலம் பாதித்திருப்பதனால் உடல், உள்ளம் இரண்டிலும் வளர்ச்சிக் குறைவாக இருக்கும். செவித்திறன் குறைபாடு இருக்கும் பெரும்பாலான குழந்தைகளுக்கு வலிப்பு வரலாம். இவர்களது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகக் குறைவாக இருக்கும். தங்கள் வாழ் நாள்முழுவதும் தங்கள் தேவைக்குப் பிறரைச் சார்ந்தே இருக்கவேண்டிய நிலையிலிருப்பார்கள்.

*கல்வியியல் வகைப்பாடு (Educational - Classification)*

மனவளர்ச்சிக் குறைபாடுடையவர்களுடைய செயல்பாட்டுத் திறனை (Level of performance) அடிப்படையாக வைத்து கல்வியியல் வகைப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

| குழுக்கள் | நுண்ணறிவு ஈவுபரவல் | நிலை |
|---|---|---|
| கல்விக்குட்பட்ட குழு (Educable) | 50-70 குறைவான மனவளர்ச்சிக் குறைபாடு உள்ளவர்கள் | அடிப்படைக்கல்வியை அளிக்க முடியும். |
| பயிற்சிக்குட்பட்டகுழு (Trainable) | 30-50 மிதமான மனவளர்ச்சிக் குறைபாடு உள்ளவர்கள் | அன்றாடவாழ்க்கை செயல்களில் (Activities for daily living) பயிற்சிகளிக்க முடியும். |
| பாதுகாப்பிற்குட்பட்டகுழு (Custodial) | 30ற்குக் கீழ் அதிக மற்றும் தீவிர மனவளர்ச்சிக் குறைபாடு உள்ளவர்கள் | எல்லாத் தேவைகளுக்கும் பிறைரையே சார்ந்திருப்பதால் அவர்கள் உயிர்வாழத் தேவையான அனைத்துச் செயல்களையும் பிறர்தான் செய்துவிட வேண்டியதிருக்கும். |

## *மனவளர்ச்சிக் குன்றியோரில் சில வகைகள்*

மனவளர்ச்சிக் குன்றியோரில் ஒரு சிலரைப் பார்த்தவுடன் நம்மால் வெகு சுலபமாக அவர்களை அடையளாம் கண்டு கொள்ள முடியும்.

### டௌன் அறிகுறியுடையோர் (Down Syndrome)

இவர்களைப் பார்த்தால் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் போல் இருப்பர். இதனாலேயே முன்னர் இவர்களைப் "மங்கோலியக்குழந்தைகள்" (Mongal Children) என்று அழைத்தனர். பின்னர் இக்குறைபாட்டைப் பற்றி முதலில் விளக்கியவரின் பெயரால் "டௌன்" அறிகுறி உடையோர் என அழைத்தனர்.

1. கண்ணிமைகள் சற்றுப்பருத்து ஓரங்களில் சற்று மேல் நோக்கி நீளவாக்கில் இருப்பது இவர்களின் தனிச் சிறப்பாகும்.
2. உள்ளங்கையில் ஒரே ஒரு ரேகைமட்டும் குறுக்குக்கோடு போன்று தெளிவாக ஓடும். இதனால் இவர்களுக்கு எதிர் காலமே கிடையாது எனத் தவறாகத் கூறுபவர்களும் உண்டு.
3. கைகளின் சிறுவிரல் மற்ற விரல்களை நோக்கி இலேசாக வளைந்திருக்கும்
4. நாக்கு தடித்தும், பல சிறு பிளவுகளுடனும் காணப்படும்
5. கால் பெருவிரலுக்கும், அதையடுத்துள்ள விரலுக்கும் இடையிலுள்ள இடைவெளி சற்று அகன்றிருக்கும்.

   இவ் அறிகுறி 21வது குரோமோசோம் ஜோடியில் ஏற்படும் அசாதாரணங்களால் ஏற்படுகிறது.

சிறுதலை(குட்டித்தலை) உடையோர் **(Micro Cerebral)**

இவர்களுக்கு உடல் சாதாரண வளர்ச்சியுடன் இருக்கும். ஆனால் தலையோ, உடம்பின்வளர்ச்சிக்கு ஏற்றவாறு இல்லாமல் அளவில் மிகவும் சிறியதாக இருக்கும். கபாலத்தின் (Skull) இணைப்புத்தையல்கள் (Sutures) ஒட்டிக் கொண்டு விடுவதாகவோ கபாலத்தின் வளர்ச்சி நின்று விடுவதாலோ இந்நிலை ஏற்படுகிறது.

நீர்த்தலை உடையோர் **(Hydrocephalus)**

மூளையானது மூளைத்தண்டு வடத்திரவத்தடில் (Cerebrospinal fluid) மூளையானது மூளைத் தண்டு வடத்திரவம் அளவுக்கு அதிகமாகச் சுரந்து விடுமேயானால் நீர்த்தலை என்னும் நிலை ஏற்படுகிறது. இதனால் தலை மிகவும் பெருத்து, பார்ப்பதற்கு விகாரமாக மாறிவிடும்.

கண்களின் கருவிழிகள் மறையும் சூரியனைப் போல் பாதி மட்டும் வெளியில் தெரியும் பெரும்பாலும் இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நீண்டநாட்கள் உயிர் வாழ்வதில்லை ஆனால் தற்போது மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் நவீன மருந்துகள் அறுவை சிகிச்சைகள் மூலம் இத்தகையோரை உயிர் பிழைக்க வைக்க முடியும்.

கிரடினிஸம் **(Cretinism)**

தைராய்டு சுரப்பி (Thyroid Gland) இல்லாமையாலோ, அதன் சுரக்கும் ஆற்றல் குறைந்து விடுவதாலோ கர்ப்ப காலத்தில் தரப்படும் கேடயச் சுரப்பிக் குறைவுக்கான மருந்து அதிகரித்து விடுவதாலோ

கிரடினிஸம் என்னும் நிலை ஏற்படுகிறது. கிரடினிஸத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் குட்டையானவர்களாக இருப்பர்.

பெரும்பாலும் அயோடின் (Iodine) சத்துக்குறைவினால் முன்கழுத்துக்கழலையும் ஏற்படலாம்

இக் குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்தவுடன் கண்டறிந்தால் உடனடிச் சிகிச்சையைத் துவக்கி தொடர் மருத்துவக் கண்காணிப்பில் வைத்து மனவளர்ச்சிக் குறைவைத் தடுத்து விடலாம்.

## மனவளர்ச்சிக் குறைபாட்டை தடுக்கும் வழிமுறைகள்

1. இரத்த சம்பந்தம் உள்ள உறவினர்களிடையே நடைபெறும் திருமணத்தை தவிர்க்க வேண்டும்

2. கர்ப்பிணிக்கு ஏதேனும் நோய்கள் தாக்கினால் உடனடியாக மருத்துவரை அணுகி, அவர் ஆலோசனையின் படி மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

3. 18வயதுக்கு முன்போ, 35வயதிற்கு பின்போ கருத்தரிப்பை தவிர்த்தல் வேண்டும்.

4. கருச்சிதைவிற்காக உட்கொள்ளும் மாத்திரைகள் பயனற்றுப்போகும் நிலையில் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

5. இரத்தப் பரிசோதனை செய்து "RH" ஒவ்வாமை (RH - In-compatibility) இருக்குமானால், குழந்தை பிறந்தவுடன் தாய் இமினோகுளாபின் ஊசி போட வேண்டும்.

6. தாய்க்குப் போதைப் பழக்கமிருந்தால் அறவே விட்டொழிப்பது நல்லது.

7. குழந்தைக்குத் தடுப்பூசி சொட்டு மருந்துகள் (Immunisation) தவறாது கொடுக்க வேண்டும்.

8. மருத்துவமனையில் மட்டுமே பிரசவம் பார்க்க வேண்டும்.

---

நன்றி : உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3வது திட்டம், திருச்சி மாவட்டம்.



# அதிபரின் ஆண்டறிக்கை

அகவை நான்கை பூர்த்தி செய்து ஐந்தாம் வருடத்தில் காலடி வைக்கும் இத்தினத்தில் புதுவாழ்வு பூங்கா (மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பயிற்சி நிலையம்) தொடர்பான அதிபரின் ஆண்டறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். பிஞ்சுப் பாலகர்களாகப் பிறந்து அந்த குழந்தைத் தனம் என்றுமே மாறாது வாழ்ந்து கொண்டிருக்கும் கள்ளம் கபடமற்ற சிறார்களுக்கு பயிற்சி களினூடாகவும் மருத்துவச், சமூக, பொருளாதார புனர்வாழ்வுகளினூடாகவும் புன்வாழ்வளிக்கும் பாரிய பொறுப்பினைக் கொண்ட இந் நிலையம் வவுனியா மாவட்ட வலுவிலந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால் நாடாத்தப்பட்டு வருகிறது. 2007ம் வருடம் முழுவதும் இப்பயிற்சி நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் முழுவதையும் இவ்வறிக்கையின்கண் நீங்கள் காணலாம்.

## (1) பொது தகவல்கள்

### 1.1 மாணவர்கள்

இவ் வருட இறுதியில் 41 மாணவர்கள் இப்பயிற்சி நிலையத்தில் இணைக்கப்ப்ட்டிருக்கிறார்கள். கடந்த வருட 25 மாணவர்களுடன் ஒப்பிடும் போது இது 64 வீத அதிகரிப்பாகும். ஒவ்வொரு மாணவனும் அனுமதிக்கப்படும் போது விஞ்ஞான ரீதியான விவேக ஈவு கணிப்பீட்டு அளவின்படி மதிப்பீடு செய்யப்படுகிறார். அவ்வாறு மதிப்பிடப்படும் விவேக ஈவு அடிப்படையில் மாணவர்கள் அனைவரும் மூன்று குழுக்களாக வகுக்கப்படுகிறார்கள்.

அது தொடர்பான விபரத்தை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| குழு | வி.ஈ.வு | மா.எண் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| 01 | கல்விக் குட்பட்ட குழு | 8 | 6 | 2 |
| 02 | பயிற்சிக்குழு | 10 | 4 | 6 |
| 03 | பாதுகாப்புக் குழு | 23 | 10 | 13 |
| | மொத்தம் | 41 | 20 | 21 |

ஒவ்வொரு மாணவனும் விவேக ஈவில் ஏற்படும் வளர்ச்சி வளர்தவணைக் கணிப்பீட்டு முறை மூலம் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை கணிப்பீடு செய்யப்படுகிறது. பயிற்சிகளின் ஊடாக விவேக ஈவில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கேப்ப அவர்கள் ஒரு குழுவில் இருந்து மற்றொரு குழுவிற்கு மாற்றப்படுகின்றார்கள்.

41மாணவர்களும் பின் வரும் ஒழுங்கில் பயிற்சி நிலையத்திற்கு கொண்டு வந்துசேர்க்கப்படுவதுடன் அதே ஒழுங்கில் பயிற்சிகள் முடிந்து மாலையில பெற்றோர்களிடம் மீள ஒப்படைக்கப்படுகின்றார்கள்.

| | போக்குவரத்து முறை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பயிற்சி நிலைய பேரூந்து | 34 |
| 2. | ORHAN நிறுவன சிற்றூர்தி | 04 |
| 3 | பயிற்சி நிலைய முச்சக்கர வண்டி | 02 |
| 4. | பெற்றோர்களின் துவிச்க்கரவண்டி | 01 |
| | மொத்தம் | 41 |

இவ்வருடம் பயிற்சி நிலையம் 212 நாட்கள் நடைபெற்றது மாணவர்களின் சராசரி வரவு 24 ஆக இருந்தது.

## 1.2 வள ஆசிரியர்கள்

இவ் வருட ஆரம்பத்தில் அதிபருடன் மூன்று வள ஆசிரியர்களும் பயிற்சி வழங்கும் கருமத்தில் ஈடுபட்டனர். எனினும் துரதிஸ்ட வசமாக கடுமையான நோயினால் பீடிக்கப்பட்ட செல்வி. விஜித்தா வினாயகமூர்த்தி 27ந் திகதி யூன் மாதம் இடைவிலக்கிக் செல்ல இவ்வருட இறுதி வரை வள ஆசிரியை ஜீவதயானி இராமசாமி அவர்கள் பதில் அதிபராக கடமையாற்றினார். அதே வேலையில் இவ் இடைவெளியை பதிலீடு செய்யும் ஒரு முயற்சியாகவும் பேசுதலில் இடர்பாடு கொண்ட பிள்ளைகளுக்கு பேச்சுப் பயிற்சி அளிப்பதற்காகவும் திருமதி.மாரியம்மா சச்திதாதானந்தன் வள ஆசிரியராக இணைத்துக் கொள்ளப்பட்டார். இவர்களோடு கூட ஏற்கனவே ஆசிரியராக இருந்த செல்வி சாந்தி தங்கவேல் வான்விழி மகேஸ்வரன் ஆகியோர் தமது சேவைகளை வழங்கியிருந்தனர்.

## 1.3 கல்விசாரா ஊழியர்கள்

இவ் வள ஆசிரியர்களுக்கு உதவியாக பின்வரும் நான்கு கல்விசாரா ஊழியர்கள் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி இருந்தனர்.

திரு.சு.ரஜனிகாந் - பேருந்து மற்றும முச்சக்ரவண்டி சாரதி, திருமதி கமலா.ஈஸ்வர மூர்த்தி அலுவலக உதவியாளர், திருமதி.ரோகமணி சுப்பிரமணியம் உணவு தயாரிப்பாளர் திரு. இ அருச்சனன் காவளாளி இவர்களுக்கு மேலதிகமாக ஓகன் நிறுவனத்தின் சிற்றூர்திசாரதி திரு. வே. இராசரட்ணம் அவர்களும் மாணவர்களை பயிற்சி நிலையத்திற்கு கொண்டுவரும் முகமாக செயற்பட்டிருந்தார்.

## 1.4 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர் கூட்டங்கள்

நிர்வாக செயற்பாடுகளையும் நிதி செயற்பாடுகளையும் வலுவூட்டும் அதே வேலையில் ஊழியர்களின் பிரச்சினைகளை விளங்கி கொள்வதற்காகவும் தீர்வுகளை மேற்கொள்வதற்காகவும் ஒவ்வொரு மாத்திலும் இரண்டாவது சனிக்கிழமை ஊழியர் கூட்டம் கிரமமாக ஆவணி மாதம் தவிர - 11 மாதங்கள் நடைபெற்றன.

## 1.5 ஆசிரியர் பயிற்சி

ஆசிரியர்களின் பயிற்சி வழங்கும் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு தவணை விடுமுறை நாட்களிலும் வள ஆசிரியர்களின் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ் வருடமும் 3 தவணை விடுமுறை நாட்களிலும் வள ஆசிரியர்கள் பல்வேறு பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர்.

## 1.6 பௌதீக வளங்கள்

இப் பயிற்சி நிலையம் தொடர்ந்தும் 181 நாவலர் வீதி பண்டாரிக்குளம் வவுனியாவில் அமைந்துள்ள வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வந்தது. இக் கட்டிடத்தினுள் அலுவலக அறை 3 குழுக்கழுக்குமான வகுப்பறைகள் கூட்ட மண்டபம் ஆசிரிய,மாணவ மலசலகூடம் ஆகிய வசதிகள் உண்டு. அதே வேலையில் UNHCR QIP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் SOLIDAR நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் தவசிகுளம் கிராமசேவையாளர் பிரிவில் சேவாலங்கா நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டு அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட காணியில் ரூபா 23,92,858.85 பெறுமதியான நிரந்தர கட்டிட நிர்மாண பணிகள் அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு மார்கழி மாதம் பூர்த்தியாக்கப்பட்டன. இதன் பயனாக 2008 தொடக்கம்

இப் பயிற்சி நிலையம் தனது சொந்த கட்டிடத்தில் இயங்கும் வாய்ப்பை பெற்றுள்ளது.

மேலும் இப் பயிற்சி நிலையத்திற்கு வன்னி கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் உயர் திரு சிவசக்தி ஆனந்தன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 65000ஐ பயன்படுத்தி இம் மாணவர்களுக்கான விளையாட்டு பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டது.

இவற்றோடு கூட இப் பயிற்சி நிலையம் போதுமான தளபாடங்களையும் கற்பித்தல் உபகரணங்களையும், தொலைக்காட்சி கணினி உட்பட சகல உபகரணங்களையும் நிலையம் கொண்டுள்ளது.

அத்துடன் திரு.ஜெயகாண்டீபன் தீபன் குடும்பத்தினரால் ரூபா.38000ம் பெறுமதியான குளிர்சாதனப் பெட்டியொன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ் வருடம் மார்ச் மாதம் ரூபா 15 லட்சம் பெறுமதியான பேரூந்து வண்டியொன்றை சொலிடார் நிறுவனம் வழங்கியதைத் தொடர்ந்து போக்குவரத்தில் நாம் எதிர் நோக்கிய பெறும் இன்னல்கள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

இப் பேருந்து வண்டியுடன் பயிற்சி நிலையத்திற்கு சொந்தமான முச்சக்கரவண்டியொன்றும் சேவையில் பயன்படுத்தப்படுகின்றது.

## 1.7 நிதி வளம்

இவ் வருடத்திற்கு திட்டமிட்டிருந்த மொத்த செலவினம் 19,93,580ஆகும் கடந்த வருட இறுதியில் நாம் திட்டமிட்டப்படி ஓகன் சிறிலங்கா யு.கே எமது பிரதான நிதி அனுசரணையாளராக இருந்த போதிலும். அதிகரித்துச் செல்லும் எல்லாச் செலவினங்களையும் அந்த குழாமினால் மட்டும் ஈடுசெய்ய முடியாது என்ற காரணத்தினால் புதிய நிதி ஆதாரங்ககயைள தேடும் முயற்சியில் ஈடுபட்டோம். அதில் வெற்றியும் கண்டோம். - டயகோணிபாடன், SCOT

ஆகிய இரு நிறுவனங்கள் புதிதாக 2007ம் ஆண்டில் நிதிப் பங்களிப்புகளைக் செய்தன. இதற்கிணங்க எமது மொத்த நிதி வளம் பின்வருமாறு அமைந்தது:

| | | |
|---|---|---|
| 1) | ஓகன் சிறிலங்கா யு.கே | 16,84,747.66 |
| 2) | ஸ்கொட் | 2,18,450.00 |
| 3) | டயகோணிபாடன் | 8,89,888.00 |
| | மொத்தம் | 27,93,085.66 |

இவ்வருடம் மொத்த செலவீனம் 20,84,897.89 ரூபா ஆகும் அதன் விபரம் பின்வருமாறு

| விபரம் | தொகை |
| --- | --- |
| ஒகானுக்கு செலுத்திய நிதி மீளளிப்பு (சென்ற வருட செலவு) | 110,806.50 |
| வாடகை | 96,000.00 |
| புதிய கதிரை | 3,900.00 |
| திருத்த வேலைகள் | 4,930.00 |
| கற்பித்தல் உபகரணங்கள் | 33,492.50 |
| சம்பளங்கள் | 4,92,345.00 |
| காகிதாதிகள் | 20,864.00 |
| மதிய உணவு | 256,182.75 |
| தேனீர் செலவு | 34,273.00 |
| தொலைபேசி | 36,386.10 |
| மின்சாரம் | 12,082.40 |
| போக்குவரத்து | 4,80,925.09 |
| ஆசிரியர்பயிற்சிகள் | 20,694.00 |
| அலுவலக உபகரணங்கள் | 40,494.00 |
| அச்சுச் செலவுகள் | 12,400.00 |
| மருத்துவ பொருட்கள் | 37,281.00 |
| சுகாதாரப் பொருட்கள் | 5,900.00 |
| U.K. பயண முற்பணம் | 180,000.00 |
| தபால் செலவு | 13,280.00 |
| வேலி | 82,000.00 |
| நிழல் பிரதிகள் | 1,976.50 |
| பஸ் பராமரிப்புச் செலவுகள் | 48,444.00 |
| முச்சக்கரவண்டி திருத்தச் செலவு | 40,529.00 |
| வங்கி கட்டணங்கள் | 2,716.05 |
| ஏனைய செலவுகள் | 16,996 |
| | **2,084,897.89** |

## (2) பயிற்சியுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 2.1 மாணவர்களின் வருகை

இவ்வருடம் 212 நாட்கள் பயற்சி நிலையம் நடாத்தப்பட்டது. மாணவரின் சராசரி வருகை 24 ஆகும். இம்மாணவர்கள் பின்வரும் முறைகளில் பயிற்சி நிலையத்திற்கு கொண்டு வரப் பட்டார்கள்.

1. பயிற்சி நிலையப் பேருந்து
2. ஓகான் நிறுவனத்தின் சிற்றூர்தி
3. பயிற்சி நிலைய முச்சக்கர வண்டி
4. பெற்றோர்களின் துவிச்சக்கரவண்டி

### 2.2 காலை உணவை உட்கொள்வதற்கான பயிற்சி

மாணவர்கள் அனைவரும் தமது காலை உணவை வீடுகளில் இருந்து கொண்டு வருவது கட்டாயமாக்கப்பட்டிருந்தது இது அவர்கள் உணவை உற்க்கொள்ள ஆசிரியர்களினால் பயிற்றப்படும் நோக்கத்தைக் கொண்டிருந்த போதிலும், மற்றவர்களுடன் சேர்ந்து உண்ணும் பழக்கத்தையும், போதுமான ஊட்ட உணவை உட்க் கொள்வதை உறுதிப்படுத்துவதையும் ஊக்குவித்தது அதற்கும் மேலாக பெற்றோர்களின் பங்களிப்பையும், வற்புறுத்துவதாக அமைந்தது.

### 2.3 காலைக் கூட்டங்கள்

ஒவ்வொரு நாளும் காலை உணவின் பின் 9.30 தொடக்கம் 10.30 வரை காலைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன, இக் கூட்டங்களில் இந்து மத வழிபாட்டுடன் கிறிஸ்தவ மத வழிபாடும் இணைந்து நடாத்தப்பட்டன, மாணவர்கள் ஒன்றாகக் கூடி யோகாசனப் பயிற்சி, உடற்பயிற்சி போன்றவற்றில் ஈடுபட்டனர். திருக்குறல்., ஆத்திசூடி

போன்றவற்றை கூறுவதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அனுதினமும் நற்சிந்தனைகள் வள ஆசிரியர்களால் கூறப்பட்டு அவற்றை மீளக்கூறும் பயிற்சி வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாள் காலைக்கூட்டமும் ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கப்படும் பாடசாலைக் கீதத்துடன் மாணவர்களும் இணைந்து பாடும் நிகழ்வுடன் முற்றுப் பெற்றன.

## 2.4 நாளாந்த வாழ்வியல் பயிற்சி

காலைக் கூட்டத்தை தொடர்ந்து நாளாந்த வாழ்வியல் பயிற்சி சகல மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மாணவனுக்கும் அவர்களது இயலுமைக்கு ஏற்ப பல் துலக்குதல், தலை வாருதல், உடையணிதல் போன்ற தமது கருமங்களை தாமே செய்யும் பயிற்சி வளங்கப்பட்டது. இப்பயிற்சியின் போது, பிள்ளைகளின் சுத்தமும் ஆசிரியர்களால் அவதானிக்கப்பட்டது.

## 2.5 பால் வழங்குதல்

பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் முயற்சிகளில் ஒன்றாக அவர்களுக்கு பால் வழங்கப்பட்டது. ஒவ்வொரு பிள்ளையும் தினமும் 175மில்லி லீற்றர் பால அருந்தினர். எனினும் வைத்தியர்களின் ஆலோசனைக்கு ஏற்ப சில பிள்ளைகளுக்கு இதில் விளக்கமளிக்கப்பட்டது.

## 2.6 கல்விக்குறப்பட்ட குழுவிற்கு பயிற்சி

கல்விக்குறப்பட்ட குழுவில் உள்ள பிள்ளைகளுக்கு தமிழ், ஆங்கிலம் எழுத்துக்களையும் சிறிய சொற்களையும், இலக்கங்களையும் எழுதுவதற்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அத்தோடு தமது பெயர்களையும் பெற்றோர்களின் பெயர்களையும், ஊர்களின் பெயர்களையும் எழுத கற்பிக்கப்பட்டனர். அத்தோடு நாளாந்த

வாழ்வியல் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். பாதுகாப்பாக இருக்கவும் மற்றவர்களுக்கு ஊறு விளைவிக்காமல் இருக்கவும் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

## 2.7 பயிற்சிக்குட்பட்ட குழுவிற்குப் பயிற்சி

ஒட்டுச் சித்திரம், படம் வரைதல், பொருட்களைப் பொருத்துதல், சிறிய கைப்பணிப் பொருட்களைச் செய்தல், போன்றவற்றில் பயிற்சிக்குற்பட்ட குழுவிலுள்ள பிள்ளைகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. அத்தோடு பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலும் இவர்கள் பயிற்றறப்பட்டனர்.

## 2.8 பாதுகாப்பு குழுவிற்கான பயிற்சி

கற்றலுக்கோ, பயிற்சிக்கோ போதுமான விவேக ஈவு இல்லாத இக் குழுவில் உள்ள பிள்ளைகளுக்கு பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள் மட்டும் வழங்கப்பட்டன. அவர்கள் பெறும்பாலும் பயிற்சி நிலையத்தில் பாதுகாப்பான சூழ் நிலையில் இருப்பதற்கு வசதியளிக்கப்பட்டது.. அவர்களை எவ்வாறு பாதுகாப்பாகப் பேணுவது என்ற பயிற்சி பெற்றோர்களுக்கு வழங்கப்பட்டது.

## 2.9 வளர்தவணை மதிப்பீடு

ஒவ்வொரு தவணை இறுதியிலும் பிள்ளைகளின் முன்னேற்றம் மதிப்பிடப்பட்டது. வளர்தவணை முன்னேற்ற அறிக்கைகள் பெற்றோர்களுடன் கலந்துரையாடப்பட்டன. ஒவ்வொரு தவணையிலும் இதற்கென 210 செயற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டு பிள்ளைகளின் விவேக ஈவு மறுமதிப்பீடு செய்யப்பட்டது. மாற்றங்களுக்கு ஏற்ப பிள்ளைகள் குழு மாற்றம் செய்யப்பட்டனர். உதாரணமாக விவேக ஈவில் முன்னேற்றமடைந்த பிள்ளைகள் பயிற்சிக் குழுவிலிருந்து கற்றல் குழுவிற்கும் அல்லது பாதுகாப்பு குழுவிலிருந்து பயிற்சிக் குழுவிற்கும் மாற்றப்பட்டனர்.

**2.10 மதிய போசனம் அளித்தல்**

மதிய உணவை உட்கொள்ள பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கென பயிற்சி நிலையத்திலேயே மதிய உணவு தயாரிக்கப்பட்டது. இதற்கென வைத்தியர்களாலும் பொது சுகாதார பரிசோதகர்களாலும் பரிந்துரைக்கப்பட்ட திட்டவட்டமான, உணவு அட்டவணை பின்பற்றப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் ஊட்டமான உணவைப் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டது.

**2.11 மாணவர்கள் வீடு திரும்புதல்.**

மாணவர்கள் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்த அதே முறையில் வீடுகளுக்கு மீள அனுப்பப்பட்டனர். இதன் மூலம் பெற்றோர்கள் இல்லங்களில் பயிற்சியைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டது.

**2.12 பெற்றோர் கூட்டம்**

பிள்ளைளகளின் முன்னேற்றம் பற்றியும், எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக ஒவ்வொரு மாதத்திலும் 3ஆவது சனிக்கிழமையில் பெற்றோர் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இவ்வருடம் 8ம் மாதம் தவிர்ந்த 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பெற்றோரின் சராசரி வருகை 14அகும்.

**2.13 பெற்றோர் சிரமதானம்.**

பயிற்சி நிலையத்திற்கு பெற்றோரின் பங்களிப்பு கட்டாயமாக இருத்தல் வேண்டும், என்ற நோக்கில் இவ்வருடம் 03 சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெற்றோரின் சராசரி பங்குபற்றல் 14 ஆகும் இதன் மூலம் பயிற்சி நிலையம் சுத்திகரிக்கப்பட்டதோடு பயிற்சி நிலைய புதிய கட்டிடம் அமைக்கப்படும் காணியும் துப்பரவு செய்யப்பட்டது.

### 2.14 வீட்டுத்த தரிசிப்பு

வள ஆசிரியர்களும் ஓகன் நிறைவேற்றுக் குழுவினரும் 14 தடவைகள் வீட்டுத் தரிசிப்புகளை மேற்கொண்டனர். இதன் மூலம் பிள்ளை தொடர்பான பிரச்சினைகளும் வீட்டில் மேற்கொள்ள வேண்டிய பயிற்சிகள் பற்றி பெற்றோர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

## (3) மருத்துவப்புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்.

### 3.1 மருத்துவப் பரிசோதனை

ஒவ்வொரு வருடமும் மாணவர்களின் மருத்துவ நிலையை அறிந்து கொள்வதற்காக வருடாந்த மருத்துவ பரிசோதனை நடாத்தப்படுகிறது. அந்த வகையில் இவ்வருடம் 22/03/2007ம் திகதியன்று வவுனியா பொது மருத்துவ மனையை சேர்த்த வைத்தியர் திரு.உமாகரன், வைத்தியர் சுதாகரன் ஆகிய வைத்தியர்கள் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து 20 மாணவர்களை பரிசோதனைக்குட்படுத்தினர். இதற்கு மேலதிகமாக மாணவர்களின் போசாக்கு நிலையை அறிந்து கொள்வதற்காக வவுனியா சுகாதார மருத்து அதிகாரி அலுவலகத்தை சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்களாகிய திரு N.சஞ்சீவ்,திரு S.வேர்டயன், திருமதி.S.விமலேஸ் 28/03/07 அன்று பயிற்சி நிலையத்துக்கு வருகை தந்து மாணவர்களை பரிசோதனைக்குட்படுத்தினர். எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் 04 மாணவர்கள் இன்னமும் மருத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. மருத்துவ பரிசோதனையில் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வரும் வவுனியா பொது மருத்துவமனை மருத்துவர்களுக்கும், பொது சுகாதார வைத்தியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். 28 மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 9 மாணவர்கள் பெற்றோர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

### 3.2 தொடர் மருத்துவச் சிகிச்சை

மருத்துவ பரிசோதனையில் வைத்தியர்களின் ஆலோசனைக்கேற்ப அவசியமான மாணவர்கள் சிகிச்சை நிலையங்களுக்கு தொடர் மருத்து சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்கள்.

| சிகிச்சை நிலையம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| Medical Clinic | 17 |
| E.N.T Clinic | 03 |

### 3.3 மருத்துவ உபகரணம் வழங்குதல்

மருத்துவ ஆலோசனைப்படி இவ் வருடம் 06 மாணவர்களுக்கு மருத்துவ ஆதாரக் கருவிகள் வழங்கப்பட்டன.

| கருவி | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 1. சக்கரநாற்காலி | 02 |
| 2. கேட்டல் கருவி | 03 |
| 3. மருத்துவச் சப்பாத்து | 01 |

### 3.4 உடல் கூற்றியல் பயிற்சி

உடல் கூற்றியல் பயிற்சி தேவைப்படும் 06 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களும் வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து பயிற்சி நிலையத்திற்கு வருகை தரும் உடல் கூற்றியல் நிபுணர் திரு. P.தனஞ்செயன் அவர்களால் பயிற்சியளிக்கப்பட்டது.

### 3.5 போசாக்கு உணவு அளித்தல்

போசாக்கு மட்டத்தை பேணும் நோக்குடன் அனைத்து மாணவர்களும் 07/03/2008 திகதியன்று பயிற்சி நிலையத்திற்கு

வருகை தந்த வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலக திரு.நவரட்ணம் சஞ்சீவ், திரு.சில்வஸ்ரர் வேள்டயன், திருமதி.விமலேஸ் கிறிஸ்தோபர் ஆகிய பொது சுகாதார பரிசோதகர்களால் மாணவர்கள் அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க போசாக்கின் பொருட்டு பின்வரும் செயற்பாடுகள் நடை முறைபடுத்தப்பட்டன.

1) போசாக்கான உணவை வீடுகளில் இருந்து கொண்டு வந்து அருந்தச் செய்தல்

2) மாணவர் ஒருவருக்கு நாளொன்றிக்கு தலா 175ml பால் வழங்குதல்

3) பயிற்சி நிலையத்தால் தயாரிக்கப்படும் போசாக்கான மதிய உணவு வளங்கள்.

4) வவுனியா சாயி சிறுவர் இல்லத்தால் வழங்கப்படும் பஞ்சபோசனம் உணவை இரு வாரங்களுக் கொருதடவை வழங்குதல்.

5) வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்ட மாணவர்களுக்கு,போசாக்கு மருத்துகளும், குளிசைகளை வழங்குதல்.

இப்பணியில் எமக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் சுகாதார மருத்துவ அலுவலக பொது சுகாதார பரிசோதகர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகும்.

### 3.6 உளவள ஆலோசனையளித்தல்

இத்தகைய ஆலோசனை தேவைப்படும் மாணவர்கள் இல்லையாதலால் இச் சேவை வழங்கப்படவில்லை

### 3.7 மொழிப் பயிற்சியளித்தல்

பேசுவதில் சிரமத்தை எதிர் நோக்கும் 12 மாணவர்களுக்கு பேச்சுப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கென இவ்வருடம் பேச்சுப் பயிற்சியாளர் ஒருவர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

## (4) சமூகப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

### 4.1 விளையாட்டுப் போட்டிகள்

பயிற்சி நிலையத்தின் நேரசூசியில் ஒவ்வொரு குழுவினருக்கும் விளையாட்டு பாட வேளைகள் ஒதுக்கப்பட்டன. அப்பாட வேளைகளின் போது மாணவர்கள் தத்தமது இயலுமைக்கு ஏற்ப விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் வலுவிழப்புடன் கூடிய சிறார்களுக்கான மாவட்ட விளையாட்டுப் போட்டியாகிய ORHAN விளையாட்டு போட்டி 2007 இல் பங்குபற்றுவதற்கு 16/07/2007, 06/09/2007 திகதிவரை விசேட விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவ் விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கு வசதியாக 2ம் தவணை நாட்கள் செப்டெம்பர் 7ம் திகதிவரை நீடிக்கப்பட்டமை. இங்கு குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் 21 மாணவர்கள் பங்கு பற்றினார்கள். பெற்ற பதக்க விபரங்கள் வருமாறு,

| பதக்கம் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| தங்கம் | 2 |
| வெள்ளி | 3 |
| வெங்கலம் | 7 |

இவ்வறிக்கை அச்சுக்கு செல்லும் வரை இம் மாணவர்கள் வருடம் தோறும். பங்குபற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியாகிய "சன்சயின்" விளையாட்டு போட்டிகள் நடை பெறவில்லை.

4.2 சுற்றுலாக்கள்

ஒவ்வொரு மாதமும் மாணவர்களைபயிற்சி நிலையத்துக்கு வெளியே அழைத்துச் சென்று சுற்றாடலை அவதானிக்க வாய்ப்பளிக்க முயற்சிக்க பட்டது. எனினும் மோசமடைந்த நாட்டு பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக இம் முயற்சியை பெருமளவுக்கு மட்டுப்படுத்த நேர்ந்ததால் 02 தடவைகள் மட்டுமே மாணவர்கள் சுற்றுளாவுக்கு அழைத்து செல்லப்பட்டனர். சாதகமற்ற பாதுகாப்பு நிலைமை காரணமாக வருடத்தில் ஒரு தடவை மாவட்டத்துக்கு வெளியே அழைத்துச் செல்லும் சுற்றுலா இவ் வருடம் இடம் பெறவில்லை.

| திகதி | பார்வையிடச் சென்ற இடம் |
| --- | --- |
| 14/03/2007 | வவுனியா பொதுப் பூங்கா |
| 26/06/2007 | இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயம் |

4.3 மாணவர் மன்றம்

ஒவ்வொரு மாதமும் மாணவருள் மறைந்துள்ள திறன்களை வெளிக்கொணருவதற்காக 03 தடவைகள் மாணவர் மன்றங்கள் நடாத்தப்பட்டன. அவற்றின் போது மாணவர்கள் பாடல், ஆடல் முதலியவற்றில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிக்காட்ட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது,

## 4.4 சமய நிகழ்ச்சிகள்

மாணவர்களின் காலைக் கூட்டத்தில் சமய பிராத்தனைகள் இடம் பெருவதற்கு மேலதிகமான ஒவ்வொரு வெள்ளிகிழமையும் அருகில் உள்ள கோயிலுக்கு அழைத்துச் செல்லும் ஒழுங்கு பின்பற்றப்பட்டு வந்தது. எனினும் பதட்டமான பாதுகாப்பு நிலைமை காரணமாக இவ்வருடம் 02 தடவை மட்டுமே ஆலயத்திக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வருடா வருடம் பயிற்சி நிலையத்தில் கொண்டாடப்படும் சரஸ்வதி பூசை இவ்வருடமும்19/10/07 தினத்தன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## 4.5 கலாசார நிகழ்ச்சிகள்

பயிற்சி நிலையத்துக்கு வெளியே கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபற்ற அழைப்புகள் கிட்டும் போது மாணவர்கள் பங்கு பற்ற ஒழுங்கு செய்யப்படுதல் வழக்கம், அந்த வகையில் இந்த வருடமும் கலாச்சார நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்குபற்றினர்.

3/12/07 அன்று கொண்டாடப்பட்ட சர்வதேச விசேட தேவைக்குட்பட்டோர். தினத்தை முன்னிட்டு பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்த 30 சாதாரண பாடசாலை மாணவர்களுக்கு 03 நிகழ்ச்சிகள் செய்து காட்டப்பட்டன. இதில் 08 மாணவர்கள் பங்குபற்றினர்.

## (5) பொருளாதாரப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய செயற்பாடுகள்

5.1 தொழிற்பயிற்சியளித்தல்

5.2 தொழில் வாய்ப்பளித்தல்

5.3 தொழிலுக்கான நிதி வசதியளித்தல்

பிள்ளைகளின் பொருளாதாரப் புனர்வாழ்வுடன் தொடர்புடைய மேற் கூறப்பட்ட செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் 02 மாணவர்களின் குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது. ஒரு மாணவன் மட்டும் பரீட்சார்த்த முயற்சியாக ஓகன் நிறுவனத்தின் தோற்பொருள் பயிற்சி நெறிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டார். 2008ம் ஆண்டு இச் செயற்பாடுகளில் குறிப்பாக சிறிய கைப்பணி வேலைகளில் மாணவர்களுக்கான பயிற்சிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## (6) எதிர் நோக்கிய சவால்களும் கற்றுக்கொண்ட பாடங்களும்

வருடம் முழுவதும் பயிற்சி நிலையத்தை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதற்கு நாம் அனேக சவால்களை எதிர் நோக்க வேண்டி இருந்தது. அவற்றிற்கு சிறப்பாக முகம் கொடுத்து அவற்றை தீர்ப்பதற்கான பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளோம். அத்தகைய சவால்களை பின்வருமாறு தொகுத்துக் காட்டலாம்.

(1) **மோசமடைந்துள்ள பாதுகாப்பு நிலைமை**

இதனால் சில தினங்களில் பயிற்சி நிலையத்தை மூட நேரிட்டது. சுற்றிவளைப்பு சோதனைகளால் சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களதும், மாணவர்களதும் வருகை தடைப்பட்டது எனினும் இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் பயிற்சி நிலையம் நடைபெறுவது உறுதிப்படுத்தப்பட்டது.

(2) **போக்குவரத்துப் பிரச்சினை**

தூரத்துக் கிரமங்களில் இருந்து பிள்ளைகளை பயற்சி நிலையத்துக்குக் கொண்டுவர போக்குவரத்து வாகனமில்லாமை இவ்வருட ஆரம்பித்தில் பெரும் சவாலாக இருந்தது. ஆனால் மார்ச் மாதம் solidar நிறுவனம் அன்பளிப்பு செய்த பேருந்து வண்டியுடன் இப்பிரச்சினையின் தீவிரம் குறைக்கப்பட்டது. ஓகன் நிறுவனத்திற்கு FLICT, WUSC ஆகிய நிறுவனங்கள் இணைந்து சிற்றூர்தி ஒன்றை அளித்ததன் விளைவாக இப்பிரச்சினை மேலும் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் மிக நீண்ட தொலை தூரத்திலுள்ள பிள்ளைகளை பயிற்சி நிலையத்திற்கு கொண்டு வருவதற்கான உபாயம் இன்னமும் கண்டறியப்படவில்லை.

(3) **நிதிப்பிரச்சினை**

போக்குவரத்து வசதி அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாணவர்களின் எண்ணிக்கையில் சடுதியான உயர்வு ஏற்பட்டது. இது பயிற்சி நிலையத்துக்கான நடைமுறை செலவீனத்தை பெரிதும் உயர்த்தியது. இதனால் நிதி அனுசரனை வழங்கிய ORHAN Sri Lanka U.K நண்பர் குழாத்தினால் மட்டும் வழங்கப்படும் நிதி போதுமானதாக இருக்கவில்லை.

இதன் விளைவாக டயகோனிபாடன், ஸ்க்கொட் ஆகிய இரு நிறுவனங்களின் நிதி அனுசரனை பெறப்பட்டது, எனினும் 2008ம் ஆண்டில் மாணவர் எண்ணிக்கையை 50தாக உயர்த்த திட்டமிட்டுள்ளதால் மொத்த செலவினம் சுமார் 33,00,000 ரூபாவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இந்தளவு நிதியை ஈடுசெய்ய பெருமளவு அன்பளிப்புகளை எதிர்பார்ப்பது கட்டியமாகியுள்ளது.

## (4) சொந்த கட்டடமின்மை

இப்பயிற்சி நிலையம் தொடர்ந்து வாடகைக் கட்டத்திலேயே இயங்கி வந்தது. இதன் காரணமாக பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிருந்தது. 2004-2007 வரையிலான 4 வருடங்களில் 3 கட்டங்களுக்கு இடம் மாற நேரிட்டன இங்கு நினைவு கொள்ளத்தக்கது, இதனைக் கருத்தில் கொண்டு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு பல நிதி அனுசரனையாளர்களுக்கு திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் விளைவாக Solider நிறுவனத்தின் அனுசரனையுடன் சுமார் 23,00,000 ரூபா பெறுமதியான நிரந்தர கட்டம் அமைக்கும் பணி இவ் வருடம் ஐப்பசி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணி 3 மாதத்தில் நிறைவு பெற்று 2008 ம் ஆண்டில் இருந்து பயிற்சி நிலையம் புதிய கட்டடத்தில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(5) குறைந்த பெற்றோர் ஒத்துழைப்பு

பெற்றோரின் பங்களிப்பு திருப்திகரமாக இல்லாமை நாம் எதிர் நோக்கிய மற்றுமொரு சவால் அகும் வருட இருதியில் மாணவர் எண்ணிக்கை 41 ஆக இருந்த போதிலும் பெற்றோர் கூட்டத்திற்கு வருகை தரும் பெற்றோர் எண்ணிக்கை சாராசரியாக 14 மட்டுமே வீட்டு தரிசிப்புக்கள் மூலம் பெற்றோரின் பங்களிப்பினை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

(6) ஒழுங்கற்ற மாணவர் வரவு

பெற்றோர்களின் கவனமின்மையாலும் இம் மாணவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படுவதனாலும். பல மாணவர்களின் வரவு தொடர்ந்து ஒழுங்கற்ற தாகவே இருந்தது. இது பற்றி தொடர்ந்து பெற்றோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

(7) குறைந்த ஆசிரியர் பயிற்சி

இத்துறையில் தமிழ் மொழிமூலம் ஆசிரியர்களுக்கு பயிற்சிகளுக்கு இலங்கையில் வசதியின்மை மற்றும் ஒரு சவாலாக உள்ளது. இதனால் ORHAN நிறுவனம் ஆசிரியர் பயிற்சிக்கான சொந்த பாடவிதானம் ஒன்றை வரைந்து மாவட்டத்தில் கிடைக்கத்தக்க வளவாலர்களைக் தவணை விடுமுறைகளின் போது ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. டிசம்பர் விடுமுறையின் போது நுவரெலியாவில் உள்ள மென்காபெப் நிறுவனத்திற்கு 2 வாரப் பயிற்சிக்கு ஆசிரியர்கள் அனுப்பப்பட்டனர்.

# நன்றிகள்

2007ம் ஆண்டில் இப் பயிற்சி நிலையத்தை வெற்றிகரமாக நாடாத்தி மேலும் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து 4 வருடங்களை நிறைவு செய்ய உதவிய பல அன்பு நெஞ்சங்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய கடைமை எமக்குண்டு அந்த வகையில் பின்வருவோருக்கு எமது நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

1) நிதி அனுசரனை வழங்கிய ORHAN Sri Lanka (U.K) டயகோனிபாடன் ஸ்கொட் நிறுவனத்தினருக்கு
2) மருத்துவ பரிசோதனை, தொடர் மருத்துவ சிகிச்சை, என்பவற்றில் உதவி வரும் வவுனியா பொது வைத்தியசாலை மருத்துவர்கள், சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக பொது சுகாதார பரிசோதகர்களுக்கு
3) மருத்துவ உபகரணங்களை வழங்கிய கொழும்பு பட்டக்கண்ணு பவுன்டேசன்,மன்னார்.
   வாழ்வோதயம், வவுனியா பொதுவைத்தியசாலை ஆகிய நிறுவனங்களுக்கு
4) போசாக்குணவளிக்கும் வவுனியா சாயி சிறுவர் இல்லத்தினருக்கு
5) உடல் கூற்றியல் பயிற்சிகளுக்கு உடற்கூற்றியல் நிபுணர் தனஞ்சேயன் அவர்களுக்கு
6) ORHAN நிறைவேற;று குழு உறுப்பினர்களுக்கும், ஊழியர்களுக்கும்
7) அன்பளிப்புகளை வழங்கிய நலன் விரும்பிகளுக்கு
8) புதுவாழ்வுப் பூங்கா வள ஆசிரியர்களுக்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும்
9) ஆசிரியப் பயிற்சி வளங்கிய பல்வேறு வளவாளர்களுக்கு
10) பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும்.

நன்றி

வணக்கம்

**திருமதி ஜீவதயாணி இராமசாமி**

பதில் அதிபர்

வளநிலைய ஆசிரியர்களுடன் மாணவர்கள்



சொலிடார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பேருந்துடன் மாணவர்கள்






சைகைமொழிப் பயிற்சி அளிக்கப்படுதல்



தையல் பயிற்சியின்போது மாணவர்கள்

விசேட தேவைக்குட்பட்டோர் தின
நிகழ்வில் மாணவர்கள்



விளையாட்டின்போது மாணவர்கள்



கற்றலின் போது
மாணவர்கள்



மாணவர்களின் அழகியற்
செயற்பாடுகள்



ஓகன் ஸ்ரீலங்கா யு.கே நிர்வாகக் குழுவினருடன்
ஓகன் நிறுவனத் தலைவர்



லண்டன் வருடாந்த நிதி சேகரிப்பு நிகழ்வின்போது
ஓகன் தலைவர்





Akash Graphics - Vavuniya. Tel : 077 9001345 E-mail : akashgraph@yahoo.com